www.padippakam.com

# ஏழைதாசன்


**உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்**

மே - 2005 · இதழ் எண் : 125 · விலை ரூ. 5/-

## அய்க்கூ - 250

**250 கவிஞர்கள் / 250 கவிதைகள்**

'கவிப்பா' அன்பர்!
'துளிப்பா' நண்பர்!



இது ஒரு சர்வதேசத் தமிழ்க் கவிஞர்களின் தொகுப்பு

ஆசிரியர் : 'ஏழைதாசன்' விஜயகுமார்

படிப்பகம்

www.padippakam.com



மரபுக்கவிதை

புதுக்கவிதை

# “கவிதைகள் வேண்டும்”

கீழை நாட்டுக் கவிதை மஞ்சரி என்னும் கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றை சிங்கை தமிழ்ச் செல்வம் 1995- ஆம் ஆண்டில் வெளியீடு செய்தார். அந்தப் பெயராலேயே இரண்டாவது கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றை வெளியீடு செய்வதில் தீவிரமாக முயன்று கொண்டிருக்கின்றனர்.

இந்த அரிய நூலில் இடம் பெறுவதற்கான வாய்ப்பினை இந்தியத் திருநாட்டின் சீரிய கவிஞர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கவிஞர்கள் தங்கள் படைப்புகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். பரிசீலனைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் கவிதைகள், கீழை நாட்டுக் கவிதை மஞ்சரி இரண்டாம் தொகுப்பு நூலில் இடம் பெறும். படைப்பாளர் தங்கள் பெயர், முகவரி, தங்கள் விபரங்களையும் எழுதலாம். முடிவு தேதி **ஜூன் திங்கள் 30, 2005.**

ஒரு கவிஞர் 2 கவிதைகள் எழுதலாம். 20 வரிக்கு மிகாமல் இருப்பதை உறுதி செய்யவும்.

**SINGAI TAMIL SELVAM,**
P.O.BOX No. 1678, Robinson Road, Singapore - 903328.





படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| 1. ஒடிப்போன காதலன்<br>வாங்கித் தந்தான்<br>முகம் பார்க்கும் கண்ணாடி !<br>– ம.தி. சாந்தன்,<br>மரண தண்டனை சிறைவாசி, வேலூர்-2. | 11. மக்களின் நடைபாதை<br>ஏழைகளின் வசிப்பிடம்<br>பிளாட்பாரம் !<br>– வை. சுப்பிரமணியம்,<br>பெ.நா. பாளையம், சேலம். |
| 2. நான் வாங்குவதில்லை யென்றாலும்<br>கொடுக்கவேண்டியது கட்டாயம்<br>கையூட்டு !<br>– பட்டுக்கோட்டை சீனிவாசன்,<br>செய்யாறு, திருவண்ணாமலை. | 12. மகர ஜோதி<br>மயக்கும் ஜோதிகா<br>மண்ணை மறந்த தமிழன் !<br>– மு. குமாரசாமி,<br>திருநெல்வேலி-6. |
| 3. எல்லை மீறும் அந்நியரை<br>எதிர்த்துப் போராடும்<br>தெரு நாய்கள் !<br>– உத்தம். எழிலரசு,<br>கொத்தமங்கலம், புதுக்கோட்டை. | 13. நிரப்பாமல் இறக்காதே<br>வரலாற்றுத் தாளின்<br>உனக்கான பக்கத்தை !<br>– நீடா. சி. இளஞ்செழியன்,<br>சாலியமங்கலம், தஞ்சை. |
| 4. சிறை சென்றவன்<br>திருந்தி வந்தான்<br>குற்றவாளியாய் !<br>– இராசு. குமரவேல்,<br>குறிஞ்சிப்பாடி, கடலூர். | 14. நேர்கோட்டில் கண்கள்<br>பார்வைகள் மோதிக் கொண்டன<br>காதலர் தினம் !<br>– இல.மு. பழனி,<br>சோலையார்பேட்டை, வேலூர். |
| 5. தமிழ்மக்கள் சாகக்கூடாது<br>அம்மணி அரசு கவனம்<br>மருந்துக்குத் தடை !<br>– வேலணையூர் பொன்னண்ணா,<br>டென்மார்க். | 15. நெடுநேரம் நின்றிருந்தேன்<br>உட்கார இடம் கிடைத்தது<br>படுத்தால் பரவாயில்லை !<br>– வடுவூர். சிவ. முரளி,<br>புலிவலம், திருச்சி. |
| 6. மோதிரக் கையால்<br>மோட்சம் கிட்டுமா?<br>நீதிபதி ஒடிக்கும் பேனா !<br>– கி. இளையவன் சிவா,<br>அய்யம்பாளையம், திண்டுக்கல். | 16. கற்பூர நெருப்பைக் கண்டு<br>கலங்கினான் பூசாரி<br>பட்டுவிடுமோ ரூபாய் நோட்டில் !<br>– எஸ். குமார்,<br>செல்லூர், மதுரை-2. |
| 7. போலீஸில் சேரும் போது<br>நினைத்தேன்<br>இனிமேல் திருடக் கூடாது என்று !<br>– சி. சாமிநாதன்,<br>மேட்டுப்பாளையம், கோவை. | 17. வெற்றிப் பூட்டைத் திறக்க<br>வேறு சாவி எதற்கு?<br>விரிந்த விரல்கள் இருக்க !<br>– சந்திரா மனோகரன்,<br>ஈரோடு-11. |
| 8. தமிழுக்கு நிறமுண்டு<br>படைத்தவன் எழுதினான்<br>"டேக் இட் ஈஸி பாலிஸி" !<br>– வ. சிங்காரவேலு,<br>பேராவூரணி, தஞ்சை. | 18. வான பலகையில்<br>அய்க்கூ கவிதை<br>மின்னல் !<br>– நா.கவி. குமார்,<br>சட்டையம் புதூர், திருச்செங்கோடு. |
| 9. சிதறி கிடந்த குருதியில்<br>துருவி, துருவி தேடினேன்<br>தென்படவில்லை சாதி !<br>– வீ.கே. சிவபெருமாள்,<br>சென்னை-92. | 19. எரியாமல் நின்ற<br>தெருவிளக்கின் மேல்<br>ஒளிரும் நிலா !<br>– முத்து. எத்திராசன்,<br>தி. நகர், சென்னை -17. |
| 10. உலகிற்கெல்லாம் உணவளித்தவன்<br>பட்டினியில் சாகிறான்<br>தஞ்சை விவசாயி !<br>– வீ. கிருஷ்ணவேணி,<br>போஸ்நகர், புதுக்கோட்டை-1. | 20. கொடியின் கீழ் தொண்டர்கள்<br>கோடியிலே தலைவர்கள்<br>தேசியக்கொடி !<br>– ஜி. காயத்திரி தேவி,<br>புதுக்கோட்டை – 1. |



படிப்பகம்

www.padippakam.com

21.
தேர்தல் திருவிழா
அதில் ஒரு திருப்பம்
மக்கள் தான் கடவுள் !

– எஸ். குமார்,
காரைக்குடி.சிவகங்கை.

22.
பட்டம் தப்பினால் நட்டம்
தலைப்பில் கவிதை எழுதினாள்
முதிர்கன்னி !

– அக்கினி வீரா,
சருத்துப்பட்டி, தேனி.

23.
தோற்று விடுகிறது
என் பிடிவாதம்
அழும் குழந்தையிடம் !

– சேம. சக்திவேல்,
கேத்தனூர், கோவை.

24.
வறுத்தெடுக்கும் வெயில்
சாமி தூக்கும் கூலிகள்
கற்சிலைக்கு நிழற்குடை !

– எம். சேகரன்,
இராமேஸ்வரம்.

25.
மேல்நாட்டு அலுவலக கேள்வி
குழந்தைகள் உண்டா?
முப்பது வயதில் தமிழினக்கன்னி !

– விக்னா பாக்கியநாதன்,
யேர்மனி.

26.
தொழிற்சாலை நகரில்
வெறிச்சோடிக் கிடக்கிறது
பள்ளிக் கூடம் !

– புன்னகை சேது,
வெ. காளியாபுரம், கோவை.

27.
பார்த்ததும்
தலைமறைவானான்
கடன்காரன் !

– எஸ். ஆர். இரவிந்தரராசு,
கொண்டமான்பட்டி, கிருஷ்ணகிரி.

28.
சிறைவாசம் பிடிக்கும்
உன்
அணைப்பிற்குள் நான் !

– கு. அருணோதயம்,
அருப்புக்கோட்டை, விருதுநகர்.

29.
ஜாக்கிரதையாக
பணத்தை வைத்தான்
பிக்பாக்கெட்காரன் !

– பாரதி இளவல்,
தி.நகர், சென்னை-17.

30.
விளக்கேற்ற வந்தவள்
வெளிச்சமானாள்
தன்னை நெருப்பாக்கி !

– ச. கிருஷ்ணவேணி,
புதுக்கோட்டை – 1.

31.
ஆற்றில் வெள்ளம்
அவதியில் மக்கள்
விமானத்தில் அமைச்சர் !

– ஜானகி சண்முகம்,
சேமங்கி, கரூர்.

32.
குட்மார்னிங்கில் தொடங்கி
குட்பையில் முடிக்கிறான்
ஒவ்வொரு நாளையும் தமிழன் !

– ப்ரணா.
தஞ்சாவூர்-9.

33.
ஆயிரம் பறைகள்
ஒலித்தாலென்ன
சுட்டக்கல் எழுமா?

– பாரதிக்கனல்,
பிரஞ்சுமூலை, நாகை.

34.
வாழ்வு என்பது
சாவை நோக்கி
வாழ்வது !

– க. சக்கரபாணி,
கன்னங்குறிச்சி, சேலம்-8.

35.
வாஸ்து பார்த்தா
வறுமைக் கட்டியது
பிளாட்பாரமில் வீடு !

– கு. வைரச்சந்திரன்,
பாலக்கரை, திருச்சி-8.

36.
இரண்டு வாங்கினா
ஒன்று இனாம்
வடா !

– கு.மா.இ. அரவிந்த்,
பரமத்தி-வேலூர், நாமக்கல்.

37.
கரையில் கற்கள்
ஏரியில் நீர் ஓரடி உயர்வு
காதலிக்காக காத்திருப்பு !

– தஞ்சை. கமருதீன்,
தஞ்சாவூர்-9.

38.
அரசு அதிகாரி என
அடையாளம் காட்டியது
உறங்கிய முகம் !

– முகவை. முனீஸ்,
இராமேஸ்வரம்.

39.
குளத்தில் பச்சைப்பாசி
என் காலை வழுக்கியது
சமாதானம் சொன்னது குளிர்ந்தநீர் !

– டாக்டர். ஆசுரா,
நெற்குன்றம், சென்னை-107.

40.
அழிக்க முயற்சிக்கும் போதே
அழிந்து போகிறாயே
தீக்குச்சியே !

– செ. சரோஜா,
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை-2.



படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| 41. மார்கழி மாதம்<br>பூ வைத்தால் விதவை<br>சாணி உருண்டைக்கு !<br>– காவனூர் ந. சீனிவாசன்,<br>திமிரி, வேலூர். | 51. மரத்தைச் சுற்றி மஞ்சள் துணி<br>வெறுமையாய் சிறுமி<br>பெரியார் பூமி !<br>– இரா. ஜெயசங்கரன்,<br>வானூர், புதுச்சேரி. |
| 42. இரவில் ராஜா<br>பகலில் கூலி<br>கூத்துக்காரனின் வாழ்க்கை !<br>– மதுரை. எஸ். மலைச்சாமி,<br>மதுரை-20. | 52. உனக்கான காத்திருப்பு<br>இலையைக் கிள்ளும் வேளையில்<br>யார் யாரோ உன் சாயலில் !<br>– ஆர்.எஸ். நாதன்,<br>கும்பகோணம், தஞ்சை. |
| 43. அழகாய் தானிருக்கிறது<br>கண்ணாடி<br>முகம் தெரியா வேளையில் !<br>– மு. தனகோபாலன்,<br>விளார், திருவாரூர். | 53. உள்ளே கடவுள்<br>வெளியே மனிதன்<br>இருவருக்கும் பிச்சை !<br>– கவியோவியத் தமிழன்,<br>அய்யலூர், திண்டுக்கல். |
| 44. வருமா தண்ணீர்<br>காத்திருப்பில்<br>குடம் குடமாய் வியர்வை !<br>– வெத்தியப்பன்,<br>அய்யலூர், திண்டுக்கல். | 54. அரசு பஸ் ஏறினோம்<br>மனைவி சொன்னாள்<br>பத்திரமாக பிடித்துக் கொள்ளுங்கள் !<br>– காஞ்சி. சாந்தன்,<br>காஞ்சிபுரம். |
| 45. நகரவில்லை கோப்பு<br>தூசி தட்டி<br>நகர வைத்தது இலஞ்சம் !<br>– ஆரிசன்,<br>கீழ்க்கொடுங்களூர், திருவண்ணாமலை. | 55. கூடுபோல் வாழ்க்கை<br>குதூகல வாழ்வு<br>வேடமாய் வெளிநாட்டில் !<br>– நகுலா சிவநாதன்,<br>யேர்மனி. |
| 46. ஒரு குழந்தை<br>இல்லத்தில் அடிவாங்குகிறது<br>பேருந்தில் ஒற்றைச் செருப்பு !<br>– ம. தமிழ்ப்பரிதி,<br>சின்னசேலம், விழுப்புரம். | 56. காமப்பசிக்கு விற்கும்<br>உடம்பிற்கு விடுமுறை<br>மாத விலக்கு !<br>– ம.சம்பத்,<br>அறந்தாங்கி, புதுக்கோட்டை. |
| 47. ஒருமுறை புன்னகை செய்<br>இதழ் விரிக்கட்டும்<br>பூக்கள் !<br>–புன்னகை சிவா,<br>சமத்தூர், கோவை. | 57. படித்து படித்து<br>பாழாகிப் போனாள்<br>சிகப்பு விளக்குகளில் !<br>– வைரமணி,<br>பாச்சப்பாளையம், கோவை. |
| 48. மலைகளுக்கிடையே நீர்வீழ்ச்சி<br>குளிக்கப் போய் விழுந்து விட்டேன்<br>தொப்புள் குளத்தில் !<br>– சாயல்குடி மு. இந்தியன்,<br>மணமேல்குடி, புதுக்கோட்டை. | 58. வியாபாரமாகிப் போன<br>மனித உறவுகள்<br>பெருகி வரும் முதியோர் இல்லங்கள் !<br>– க. சுரேஷ்குமார்,<br>கப்பிக்குளம், தூத்துக்குடி. |
| 49. பூத்தூவி வாழ்த்தும்<br>தென்றல் காற்று<br>மரத்தடி கூட்டம் !<br>– வானவன்,<br>செம்பியம், சென்னை-11. | 59. ஒரே பிரசவத்தில்<br>எத்தனை குழந்தைகள்?<br>பேருந்து நிறுத்தம் !<br>– கவிஞர். கே.சி. சுரேஷ்,<br>பெரம்பூர், சென்னை-11. |
| 50. சிந்தனைச் சண்டையில்<br>வார்த்தைகளின் உயிர்ச் சேதாரம்<br>மௌனம் !<br>– எஸ். கலாஸ்ரீ,<br>அடப்பன்வயல்,புதுக்கோட்டை - 2. | 60. வெள்ளைத் தாளில்<br>கருப்பு ஓவியம்<br>உன் கவிதை !<br>– பா. இலதா,<br>புதுக்கோட்டை-1. |



படிப்பகம்

www.padippakam.com

61\. காது கேட்கிறதா இறைவனுக்கு
மொழியிலும் தீட்டு
நம ! நம !
– புலவர். சி. வெற்றிவேந்தன்,
பாகூர், புதுச்சேரி.

62\. தேர்தலில் தோல்வி உறுதி
இருந்தும் வீர முழக்கம்
அரசியல் பாடம் !
– கவிஞர். தேவன்,
வாசுதேவநல்லூர், நெல்லை.

63\. உணவுப் பற்றாக்குறை நீக்க
தீர்வு கிடைத்தது
உண்ணாவிரதம் !
– ஆர். கிருஷ்ணமூர்த்தி,
திருபுவனம், தஞ்சை.

64\. மேலே பாலம்
கீழே நடந்தான்
இரயிலில் இரத்தக்கறை !
– சங்கொலி பாலகிருஷ்ணன்,
பவானி, ஈரோடு.

65\. ஏழையின் கை படுகையில்
முகஞ்சுழிக்கும் அமைச்சர்
அன்றான நிகழ்ச்சி !
– ஜா. பிராங்க்ளின் குமார்,
திருச்சி-21.

66\. மருமகளின் ஏழ்மை
மீளாத விடியல்
தீக்குச்சி !
– கவிஞர் பி.கே. நஞ்சன்,
பெங்கால் மட்டம், நீலகிரி.

67\. தண்ணீரின் விலை
நொடியில் உயர்ந்தது
பாலில் கலந்ததும் !
– கி. செல்வக்குமரன்,
திருப்பூர், கோவை.

68\. மகிழ்வான விடியல்
இதமான மனைவி
சம்பள நாள் !
– இரஜகை நிலவன்,
மும்பை, மகராஷ்டிரா.

69\. வீடெங்கும் தீ ! தீ !
காப்பாற்றி விட்டேன்
புத்தகக் குழந்தைகளை !
– பாவலர் கருமலைப் பழம்நீ,
வியாசர்பாடி, சென்னை -39.

70\. அவள் வடித்த கவிதைகளிலேயே
மிக அழகான கவிதை
அவளின் குழந்தை !
– வெ. சரஸ்வதி,
வாலிநோக்கம், இராமநாதபுரம்.

71\. சின்னஞ்சிறு வண்டு
சூரியகாந்தி மலரினுள்ளே
பொன்னிறத்தை உறிஞ்சுகிறது !
– தாமல். கண்ணன்,
பெங்களூர், கர்நாடகா.

72\. ஊர்ந்து செல்லும் வயதில்
இறுதி ஊர்வலம்
சிசுக்கொலை !
– ஏ. கண்ணன்,
பரமத்தி-வேலூர், நாமக்கல்.

73\. பெண்கள் தாலிகட்டுகிறார்கள்
ஆண்களுக்கல்ல
அம்மன் கோயில் வேப்பமரத்திற்கு !
– முகவை எஸ்.பி. பத்மநாபன்,
தஞ்சாவூர்-5.

74\. தமிழகத்தை யாரும் ஆளலாம்
கருநாடகத்தில் கோணிப்பையில்
வள்ளுவர் சிலை !
– வைகறை,
சே. குளவாய்பட்டி, புதுக்கோட்டை.

75\. என் கண்களில்
வெந்நீர்த் துளிகள்
உன் நினைவுகளின் சூடு அப்பாடி !
– பாரீசு. பார்த்தசாரதி,
பிரான்சு.

76\. ஜன்னல்களை
திறந்து விடுங்கள்
மூச்சு விட்டும் வீடு !
– ந. சந்திரசேகரன்,
உறையூர், திருச்சி -3.

77\. வாகன கண்ணாடியில்
படிந்திருந்த புழுதியில்
குழந்தையின் அய்க்கூ !
– சோ. கிருஷ்ணகுமார்,
கிணத்துக்கடவு, கோவை.

78\. குளத்து நீர்
குடிக்கப் பிரச்சினை
காய்ந்துபோனது குளம் !
– விழி. பா. இதயவேந்தன்,
கண்டமானடி, விழுப்புரம்.

79\. நனைந்த மாடு
வெறித்துப் பார்க்கும்
தலைதுவட்டும் மாட்டுக்காரனை !
– வண்ணை. சிவா,
புதுவண்ணை, சென்னை -81.

80\. அமாவாசை இரவில்
நிலாச் சோறு
அரசியல் வாக்குறுதிகள் !
–கி. இராஜகுமாரி,
செய்யாறு, திருவண்ணாமலை.



படிப்பகம்

www.padippakam.com

**81.**
சாய்வு நாற்காலி
கைத்தடி
நிரம்பி வழியும் வெறுமை !
– வலம்புரி லேனா,
திருவாலம்பொழில், தஞ்சை.

**82.**
விண்வெளிப் பயணம்
வெற்றியில் தோல்வி
கல்பனா சாவ்லா !
– கவிஞர். அஞ்சாமை கதிரொளி,
மும்பை, மகராஷ்டிரா.

**83.**
நான் போட்ட நாலணா
சாதியம் பார்க்கும் அய்யரின்
இடுப்புக் கொசுவத்தில் !
– அய்யலூர் ஜோதி,
காரையூர், புதுக்கோட்டை.

**84.**
அன்னையர் தினம்
அந்நியரால் கொண்டாடப்பட்டது
முதியோர் இல்லத்தில்!
– ஜெய. இராஜாராமன்,
தலைஞாயிறு, நாகை.

**85.**
விடிய விடிய
தமிழாராய்ச்சி மாநாடு
ஆங்கில மொழியில் !
– மட்டுவில் ஞானக்குமாரன்,
யேர்மனி.

**86.**
வலிகளும் பேசக் கூடும்
மென்மையாய்
கவிதைகள் !
– வசந்த வாசகன்,
காரிப்பட்டி, சேலம்.

**87.**
பட்டுப் போன மரம்
கிளையில் ஒற்றைப் பூ
குருவிக் கூடு !
– குவளை மு. வீரமணி,
திருக்குவளை, திருவாரூர்.

**88.**
தல விருட்சம்
ஆலங்கன்று
கோபுரத்தின் மேல் !
– மேகங்கள் விஜய்,
கும்பகோணம்-1.

**89.**
பக்குவப்படா விளைநிலம்
விவசாயத்தில் பலனில்லை
இளவயது திருமணம் !
– சித்தை பா. பார்த்திபன்,
சின்னாளப்பட்டி, திண்டுக்கல்.

**90.**
ஒற்றைக் காலில் நின்றாலும்
ஜெயிக்காது
சக்தியற்ற சிவம் !
– என். அஞ்சுகம்,
பாலப்பட்டி, நாமக்கல்.

**91.**
உள்ள விதிகள்
உதவ வில்லை
இனியொரு விதி செய்வோம் !
– தா. பகவதி,
நெல்லை-7.

**92.**
தேவை புகலிடம்
தேடி அலைகிறார்
கடவுள்!
– எம். கோவிந்தராசன்,
மதுரை- 3.

**93.**
நிரந்தமில்லாத வாழ்க்கை
நினைவூட்டுகிறது
வானவில் !
– கவிச்சுடர் இளங்கதிரவன்,
கோவை -11.

**94.**
கனவில்
குழந்தை அழுதது
பால் சுரக்கும் தாய்மை !
– சோலை. இசைக்குயில்,
ஜோலார்பேட்டை, வேலூர்.

**95.**
இனிய தமிழ் பேசு
எதிர்போரை
வாளெடுத்து வீசு !
– பத்மாவதி சீவரட்ணம்,
கனடா.

**96.**
வயிறு நிறைய சாப்பிடும்
மனது நிறையவில்லை
முதியோர் இல்லத்தில் !
– பி. தாமோதரன்,
புதுச்சேரி.

**97.**
வார்த்தையில்லா கவிதை
வாசிக்கப்படத்தான் வேண்டும்
வாழ்க்கை !
– சிவராச செல்வகுமார்,
பூக்கொல்லை, தஞ்சை.

**98.**
மரம் வளர்க்க பாடம்
ஆசிரியர் கையில்
பிரம்பு !
– நவீனசித்தன் பழனிகம்பன்,
உளுந்தூர்பேட்டை.

**99.**
நூறாண்டு வாழ்கவென
வாழ்த்தினான்
'பேஸ்மேக்கர்' இதயம் !
– மு. வீரமுத்து,
வியாசர்பாடி, சென்னை-39.

**100.**
ஒன்றை இழந்தால்தான்
இன்னொன்றை பெற முடியும்
ஆமாம் நீ !
– மு. தமிழ்ச்செல்வி,
பொரகால், காஞ்சீபுரம்.



படிப்பகம்

www.padippakam.com

101\. மரண தீர்ப்பு சொன்னதால்
மரண தண்டனையோ
பேனாவிற்கு !

– நாளைய நாயகன்,
உறையூர், திருச்சி –3.

102\. ஒன்று பெற்றால் ஒளிமயம்
அதிகம் பெற்றால்
கோர்ட் மயம் !

– கவிப்பித்தன்,
வாலாசாப்பேட்டை, வேலூர்.

103\. உழவு மாடுகளை விற்ற
இரவில் பெய்தது
மழை !

– நீலா. கிருஷ்ணமூர்த்தி,
சென்றாம்பாளையம், கோவை.

104\. மண்ணைவிட்டு தூரத்தினாலும்
தாய்மண்ணைத்தான் சுற்றுகிறது
செயற்கைக் கோள் !

– செ. இராஜேந்திரன்,
சங்கரன்கோவில், நெல்லை.

105\. சோலைக்கிளிகள்
பாடிப்பறந்தன
பாலையில் இரைதேடி !

– வெற்றியூர் வேலு சதானந்தம்,
பகரைன்.

106\. திங்கள் முதல் வெள்ளிவரை
தேம்பி அழும் தாய்க்குலங்கள்
மெகாத் தொடர்கள் !

– ஆரூர். அரசு,
வெளிப்பாளையம், நாகை.

107\. கல்லடிபட்டது
காயம் எதுவுமில்லை
கிணற்றுக்குள் நிலா !

– பிரசன்னகுமார்,
கும்பகோணம் - 1.

108\. கண்ணீர்க்காவிரி
உல்லாசமாய் பயணிக்கும்
அரசில் ஓடங்கள் !

– செந்தூரன்,
திருக்குவளை, திருவாரூர்.

109\. பெய்யெனப் பெய்த
மழை
குடிநீருக்கு அலைக்கழிக்கிறது !

– டி. இராஜேந்திரன்,
ஆயிரம் விளக்கு, சென்னை-6.

110\. எனக்கு கள்ளிப்பால்
தம்பிக்கு
தாய்ப்பால் !

– அ. பிரேமா,
குறிஞ்சிப்பாடி, கடலூர்.

111\. மதுரையில் இடிக்கப்பட்டன
108 கோயில்கள்
வாழ்க பெரியார் !

– ஆறு. கணேசன்,
திருச்செந்தூர், தூத்துக்குடி.

112\. நதியோர நகரம்
அழகாகவே இல்லை
வறண்ட நிலம் !

– ஆ.ப. செந்தில்குமார்,
கொட்டவாடி, சேலம்.

113\. இந்தியாவில்
தீவிரவாதி பிடிபட்டால்
பாகிஸ்தானில் நெறிகட்டும் !

– காவிரி மணாளன்,
கோனாப்பட்டு, புதுக்கோட்டை.

114\. வேகமாய் முளைத்தன
வயல்வெளியில்
நர்சரி கூடங்கள் !

– இரா.அ. தென்றல் நிலவன்,
திருச்செங்கோடு, நாமக்கல்.

115\. நாடெங்கும் ஆலை மூடல்
அண்டா, குண்டா, அடகுக்கடையில்
எம்.பி.க்களுக்கு சம்பள உயர்வு !

– நாகை. ஆசைத்தம்பி,
கோவை-31.

116\. படித்த பையனைப் பிடிக்க
பாய்ந்து வருகிறது
பாலிடெக்னிக் பஸ் !

– பட்டி சு. செங்குட்டுவன்,
திருமுதுகுன்றம்.

117\. குற்றுயிரோடு நோயாளி
மருத்துவ மாணவர்களுக்கு பட்டம்
அரசின் தூண்டில் முள் !

– கண்ணை ப. முருகானந்தம்,
திருபுவனம், தஞ்சை.

118\. அயோத்தி பிரச்சனை
வில்லுடைத்த இராமனுக்கு
துப்பாக்கி காவலர்கள் !

– சா. இணைகேசன்,
மும்பை, மகாராஷ்டிரா.

119\. மாதம் பிறக்கும் போதே
பிறந்து விடுகின்றன
கடனுக்கான வட்டிகள் !

– சு. கணேஷ்குமார்,
வேளச்சேரி, சென்னை-18.

120\. அனாதைக் குழந்தையை
அக்கறையாய் ஏற்றது
குப்பைத் தொட்டி !

– கு. தனப்பிரியா,
குறிஞ்சிப்பாடி, கடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

121. வைக்கோல் கன்றுக்காய்
மடிசுரக்கும் பசு
தாய்மை !
– வெ. கலிவரதன்,
அரும்பார்த்தபுரம், புதுச்சேரி.

122. மௌனத்தைக் கலைத்து
விடாதே
கலக்கத்தில் என் கவிதைகள் !
– அமிர்தம் பாலா,
அய்யலூர், திண்டுக்கல்.

123. மோனமும் சத்தமும்
முத்தம் இடுகின்றன
கவிதையில் !
– டாக்டர். இளங்கம்பன்,
பழனி, திண்டுக்கல்.

124. உலகமயமான பொருட்களின் நடுவே
காணாமல் போயிருந்தது
பொருளாதாரம் !
– இறையடியான்,
பெங்களூர், கர்நாடகா.

125. அவள் பெயர் கல்யாணி
நாளெல்லாம் முகாரி
விதவை !
– சரீஷ் தங்கவேலு,
பிரான்சு.

126. மந்திர புத்தகத்துடன் தாய்
வார இதழுடன் தமக்கை
வெள்ளைத் தாளுடன் இளங்கவிஞன் !
– நா. ஜெயக்குமார்,
வாழ்நாள் தண்டனை சிறைவாசி, வேலூர்-2.

127. சீக்கரம் சொல்லுங்கள்
எரிப்பதா? புதைப்பதா?
மனித ஜாதி !
– திருச்சிற்றம்பலம் சுரேஷ்,
கடலூர்.

128. அறுவடை முடிந்ததும்
மதிப்பற்றுப் போனது
சோளக்கொல்லை பொம்மை !
– சந்தியூர் கோவிந்தன்,
சேலம்.

129. மெல்லிய காற்று
சருகு விழ
தத்தளிக்கும் குளத்துநிலா !
– கன்னிக்கோவில் இராஜா,
சென்னை-18.

130. பிறந்த தவறு
அடிக்கடி நிகழ்ந்தது
ஏழைகளுக்கு !
– த. மஞ்சு,
கோவை-15.

131. அமோக விளைச்சல்
விளைந்தன மதங்கள்
அறுவடையாய் தலைகள் !
– வதிலை பிரபா,
வத்தலக்குண்டு, திண்டுக்கல்.

132. எதிர்காலத்தை
இறந்தகாலமாக்கும்
நிகழ்கால தவறுகள் !
– அன்பகம் இரா. பழனிச்சாமி,
கோவை - 45.

133. சாதி மத
வேறுபாடுகளால்
கருகியது மனிதநேயம் !
– சு. இலக்குமணசுவாமி,
திருநகர், மதுரை-6.

134. நிலவை
கூரை வழியாக ரசிக்கும்
கொத்தனார் மகன் !
– அந்தியூர் மூர்த்தி,
ஈரோடு.

135. விடிய விடிய
விளக்குக்கே காவல் காக்கும்
வாழ்வு முடிக்கும் விட்டில் பூச்சி !
– இணுவை. கே. சக்திதாசன்,
டென்மார்க்.

136. வீடற்ற ஏழைக்கு வீடுதர
தலைவர் வருகிறார்
சாலையோர குடிசைகள் இடிப்பு !
– விக்டர் வாசன்,
படந்தாலுமூடு, குமரி.

137. இடுப்பில் சாவிக்கொத்து
ஜொலித்தாள்....
மருமகள் இராஜ்ஜியம் !
– வசந்த இளங்கோ,
தஞ்சாவூர் - 1

138. விருந்தாளியை கவனிக்க வசதியில்லை
வயிற்றில் புளிகரைத்தது
வாசலில் கரையும் காகம் !
– பல்லவி குமார்,
விருத்தாசலம், விருதுநகர்.

139. ஒவ்வொரு சிரிப்பிலும்
புதைப்படும் கொடூரம்
ஏதுமற்ற இதயம் !
– செல்லமாள் கண்ணன்,
வியாசர்பாடி, சென்னை- 39.

140. வெற்றுக்காகிதங்கள்
கவிதையானது
உன் நினைவால் !
– இரா. மே. இராமமூர்த்தி,
தென்னலக்குடி, நாகை.





படிப்பகம்

www.padippakam.com

141. விதைக்கப்பட்டு விட்டது
அகிம்சை மண்ணில்
ஆயுத விதைகள் !
– ஆர்.கே. சக்திகணேஷ்,
இராமேஸ்வரம்.

142. நான் தொலையும் நீ
நீ தொலையும் நான்
தேடத் கிடக்கும் நாம் !
– எம். தாஜுதீன்,
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை -2.

143. குடிசைக்குள் வாழும் கவிஞனை
அழகாய் அடையாளங்கண்டது
மழை !
– உடுமலை கார்க்கோ,
உடுமலைப்பேட்டை, கோவை.

144. அன்பிற்க்கும் உண்டோ
அடைக்கும் தாழ்
வீட்டுச்சிறையில் காதலி !
– புதுவை. தமிழ்நெஞ்சன்,
மீனாட்சிப்பேட்டை, புதுச்சேரி-9.

145. எத்தனை பெரிய மாளிகைகள்
என் கோணிப்பை நிறையும்
குப்பையுள்ள வீதியினால் !
– கதேலியர்,
ரியாத், சவுதிஅரேபியா.

146. வற்றிய நீர் நிலைகள்
வரிசையில் காலிகுடங்கள்
வீடுகளில் 'மினரல்வாட்டர்' !
– பாலபாரதி,
மும்பை, மகாராஷ்டிரா.

147. மூடி மூடி வைத்தும்
முறைச்சிப்பார்க்குது
'சோத்துபானை' !
– எட்னா,
கீழ்த்திருப்பந்துருத்தி, தஞ்சை.

148. கொழுக்கின்றனர்
சத்துணவு சாப்பிடும்
ஆயாக்கள் !
– தயா கவிச்சிற்பி,
பேகம்பூர், திண்டுக்கல் - 2.

149. இராணுவத்தில் சேர்ந்தார்
இராயபுரம் இராமசாமி
சமையல் வேலை !
– பாவலர். கருமலைப்பழம் நீ,
வியாசர்பாடி, சென்னை-39.

150. காந்தி பிறந்த மண்
கோட்சேக்களின் கூடாரமாகிறது
மதவெறி !
– கவிஞர். மு. வாணி,
பாளையூர், காஞ்சீபுரம்.

151. அகதியாக தமிழ்க் குடும்பங்கள்
செருப்பாலடி
தமிழினத் துரோகிகள் !
– யாழிசைச் செல்வன்,
மும்பை, மகாராஷ்டிரா.

152. பாலைவனத்தில்
ஒரு ஆறுதல்
குளிர்ந்த நிலவு !
– சு. வேலவன்,
அருப்புக்கோட்டை, விருதுநகர்.

153. மீன்களுக்கு
உணவு போட்டான்
தூண்டிலில் !
– அந்தியூர் முருகன்,
தேரம்பாளையம், கோவை.

154. குழந்தைகள் தின விழா
வாய்விட்டு சிரித்தது
சிவகாசி மத்தாப்பு !
– இலசி,
ஓட்டிமொரா ஒசஹட்டி, நீலகிரி.

155. மலையகம்
கொழுந்துகள்
கிள்ளப் படுகின்றன !
– தமிழ் ஈழமுருகதாசன்,
யேர்மனி.

156. அரவணைக்கவில்லை கணவனை
அரசமரத்தை சுற்றினாள்
மனைவி !
– எஸ். ரஹீமான் ஷா,
கீழ்வேளூர், திருவாரூர்.

157. முத்தம் மட்டுமல்ல
மொத்தமும் பகிர்
இனிக்கும் இல்லறம் !
– முடச்சிக்காடு இளமுரசு,
பேராவூரணி, தஞ்சை.

158. சோளக்காட்டு பொம்மை
என்னைப் பார்த்து சிரித்த து
கிழியாத சட்டையுடன் !
– ந. அம்மு,
வாங்கப்பாளையம், கரூர் -6.

159. நாத்திகன்
கோவிலுக்குள் நுழைந்தான்
சிலை திருட !
–அரிச்சந்திரன்,
வேட்டுவன்கேணி, சென்னை-41.

160. குடும்பச் செலவுகளுக்கு
பெற்றோரின் அடகுப்பொருள்
குழந்தை தொழிலாளர்கள் !
– சிரா. அரங்கநாயகிராவ்,
காரைக்கால், புதுச்சேரி.



படிப்பகம்

www.padippakam.com

161. இன்றைய பிணத்துக்கு
நாளைய பிணம்
மலர் தூவி சென்றது.
– கவிஞர். லெனா,
தி.நகர், திருச்சி -18.

162. வறட்சி கண்ட சோகம்
கறுப்பு உடையில்
நிலா !
– கா. ஷஃபீ,
ஏரிப்புதூர், வேலூர்.

163. கண் முன்னே கடவுள்
தெரியவில்லை
மூக்கு கண்ணாடி இல்லாததால் !
– இரா. சுந்தரராஜன்,
கன்னங்குறிச்சி, சேலம்-8.

164. ஏணிப் படிகளில்
சில படிகள்
எதிரிகளால் ஆனவை !
– தங்கம். மூர்த்தி,
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை-2.

165. கடற்கரைக்குப் போக
பயமாகயிருக்கிறது
சுனாமி !
– ஞா. நெல்சன்,
மடத்தச்சம்பாடு, நெல்லை.

166. அச்சமில்லை
தப்பும் திருடன் நம்பிக்கை
துரத்தும் தொந்திகள் !
– புலவர். பொன்னியின் செல்வன்,
அம்மன்பேட்டை, தஞ்சாவூர்.

167. பாதைகள் சரியான வேளை
பயணிக்க இயலவில்லை
எரிபொருள் விலையேற்றம் !
– எஸ்.ஜி. இசட்கான்,
திருப்பூர், கோவை.

168. கலர் கலராய் குடிநீர்
வித விதமாய் நோய்கள்
சாயப்பட்டறை சீதனம் !
– பெரணமல்லூர் சேகரன்,
திருவண்ணாமலை.

169. தமிழ் சாகாமல் வாழ்கிறது
புலம் பெயர்ந்த தமிழர்கள்
அடையாளம் !
– கவிஞர். இரா. இரவி,
மதுரை-1.

170. உறங்கும் போதும்
சுவாசித்து இருக்கிறது
வாழ்க்கை !
– எஸ். ரேணுகாதேவி,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

171. மாந்தனைக் கொல்ல
மாந்தனிடம் ஆயுதம்
சாதி !
– புதுவை பிரபா,
பாக்கமுடையான்பட்டு, புதுச்சேரி.

172. அணைவேண்டி தற்கொலை
மழைவேண்டி பலி
குழப்பத்தில் கடவுள் !
– அ. சையத்அலி,
பெருந்துறை, ஈரோடு.

173. இட ஒதுக்கீடு இருந்தும்
இடம் பெயரவே இல்லை
எங்கள் வகுப்பு !
– ஆர்.கே. காந்திதாசன்,
கரடிப்பட்டி, நாமக்கல்.

174. பட்டுப் பூச்சியின் எச்சில்
இலட்ச ரூபாயாம்
துணிக் கடையில் !
– கவிஞர் அகல் ஆனந்த்,
பாலக்காடு, கேரளா.

175. காற்றையும் நீரையும் கெடுக்காதீர்
இங்கு பலருக்கு
இதுவே உணவு !
– கவிஞர். உழவன்,
கோவில்பத்து, நாகை.

176. சவுண்டிகளின்
சண்டித்தனம்
“தமிழில் குடமுழுக்கு கூடாது” !
– திருவைக்குமரன்,
தெப்பக்குளம்,திருச்சி-2.

177. உழைக்காமல் பிழைத்தது
ஏழைகளின் உழைப்பில்
அதிகார வர்க்கம் !
– ஆ. ஆத்மநாதன்,
பட்டுக்கோட்டை, தஞ்சை.

178. சலுகை கேட்கும்போது – கீழ்சாதி
சம்பந்தம் பேசும்போது
மேல் சாதி !
– ப. முத்துப்பாண்டியன்,
பிருந்தாவனம், புதுக்கோட்டை– 1.

179. இரு கரைகளுக்கிடையே
பேச்சுவார்த்தை நடத்துகிறதோ
பரிசல் !
– மொழிக்கரை சி.எஸ்.சாமி,
'தினகரன்' நாளிதழ், கோவை-1.

180. தனியார்மயம் – தள்ளாடுகிறது
நிரந்தரமற்ற அரசு
உத்தியோகம்.....
– நா. சுப்புலெட்சுமி,
திருப்பத்தூர், வேலூர்.




படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| 181. தைப் பொங்கல்<br>சுனாமி நினைவலைகள்<br>இனிக்கவில்லை கரும்பு !<br>– ஆறு. தமிழ்நிதிவேந்தன்,<br>காரைக்குடி, சிவகங்கை. | 191. வாக்கப்பட்டுபோன பெண் – இன்னும்<br>மறுவீட்டுக்கு<br>வரவேயில்லை – காவிரி !<br>– ஜி. சரவணன்,<br>கமுதக்குடி, இராமநாதபுரம். |
| 182. அரசியல்வாதி போல்<br>வாரிசுகளை வளர்க்கும்<br>வாழைமரம் !<br>– சி. விநாயகமூர்த்தி,<br>பழனி, திண்டுக்கல். | 192. மழை வரப் போகிறது<br>எனத் தெரிந்தும் கோலமிட்டாள்<br>அவள் – அவனுக்காக !<br>– கழனியூரன்,<br>கழுநீர்க்குளம், நெல்லை. |
| 183. சுமையில்லை இனி...<br>தாய்மார்களுக்கு<br>சோதனைக்குழாய் குழந்தை !<br>– மு. குமரன்,<br>பண்ணந்தூர், கிருஷ்ணகிரி. | 193. அதிசயந்தான்<br>மாடிவீட்டில் குடிசைவாசி<br>சிட்டுக்குருவியும், கூடும் !<br>– இளைய சாகுல்,<br>அதிராம்பட்டினம், தஞ்சை. |
| 184. ஆறுதல்<br>கண்ணீர் கண்களுக்கு<br>கவிதைப் புத்தகம் !<br>– இரா. நாகராஜன்,<br>திருவையாறு, திருவாரூர். | 194. சுடுகாட்டில் உறுதிமொழி<br>விரைந்தழியும் ஆரியம்<br>சாம்பலில் பூத்த சிவன் !<br>– வெண்குயில்,<br>இராவுத்தர்குப்பம், புதுச்சேரி. |
| 185. விழுமின் எழுமின்<br>எல்லோரும் ஓட்டமாய்<br>இரவைப் பிடிக்க !<br>– கவிஞர் சீ. அருண்,<br>கூலிம், மலேசியா. | 195. சமத்துவ மயானம்<br>சடலம் அடக்கம் செய்ய<br>அதே முனியன் !<br>– கி. விஜயகுமார்,<br>'தினகரன்' நாளிதழ், கோவை-1. |
| 186. தேதி தேவையில்லை<br>எப்போதும் படிக்கலாம்<br>காதல் கடிதங்கள் !<br>– ஆர். அஸ்லம் பாஷா,<br>ஆம்பூர், வேலூர். | 196. பட்டினிச் சாவின்<br>பரிணாம வளர்ச்சி<br>இலவச அரிசி !<br>– ஆர். சிவன்,<br>கொழிஞ்சாம்பாறை, கேரளா. |
| 187. இந்தியர் தலையில் ஆயுதச்சுமை<br>உண்டு கொழுத்திடும்<br>அமெரிக்கா !<br>– தி. அரங்கசாமி,<br>மதுரை-16. | 197. வெற்றுக்காகிதங்கள்<br>கவிதையானது<br>உன் நினைவால் !<br>– இரா. மே. இராமமூர்த்தி,<br>தென்னலக்குடி, நாகை. |
| 188. மலர்ந்து மாலையாகி<br>விலை போகாதவள்<br>முதிர்கன்னி !<br>– எஸ். அருள்வேல்,<br>வி. அரியலூர், விழுப்புரம். | 198. அந்நிய எழுதுகோல்<br>எழுதுகிறது<br>சுதேச கொள்கை !<br>– திண்டுக்கல் தமிழ்ப்பித்தன். |
| 189. சந்தை நாள்<br>ஆடு மற்றும் குட்டி<br>இருவேறு பாதைகள் !<br>– நாணற்காடன்,<br>இராசிபுரம், நாமக்கல். | 199. என் மறந்தாயோ<br>என்னை மறந்தாயோ<br>ஊமையாய் தொலைபேசி !<br>– சு. மதியழகன்,<br>மும்பை, மகராஷ்டிரா. |
| 190. விதவைக்கு மறுமணம்<br>முதிர் கன்னிகள்<br>கன்னிகளாகவே !<br>– ஏ.பி. லைட்சுமிராமன்,<br>அன்பூண்டி, வேலூர். | 200. நாட்டிற்காக இரத்தம் அன்று<br>நாற்காலிக்காக இரத்தம்<br>இன்று !<br>– போ. இளமுருகுபொற்செல்வி,<br>வக்கனாங்குண்டு, விருதுநகர். |



படிப்பகம்

www.padippakam.com

201. 108–ம் 786–ம்
கைகோர்த்தன
2004 டிசம்பர் 26 – ல்!
– நாமக்கல் பாலு,
ச.பே.புதூர், நாமக்கல்-1.

202. அரண்மனையில் உடைந்த சிலம்பு
நீதி கேட்டு...! உடையாதது
அடகில் வாழ்க்கை கேட்டு!
– ஹரணி,
கரந்தை, தஞ்சாவூர்-2.

203. உன் முகமா இது
பார்த்தவர் கேட்டார்
வாக்காளர் அட்டையில்-நான்!
– இராணுவக் கவிஞர் துரை. மூர்த்தி,
கொல்லைபாளையம், வேலூர்.

204. நட்டத்தில் ஓடுகிறது "ட்ரான்ஸ்போர்ட்"
லாபம் ஈட்டுகிறது "டாஸ்மார்க்"
வாழ்க! வளர்க! பெருங்குடிமக்கள்!
– ஆர்.சி. சவுண்டன்,
கருங்கல்பட்டி, சேலம்-6.

205. வளைவுகளில் முந்தாதீர்கள்
வாசகம் எழுத்துக்கு மட்டுமே
செயலுக்கு அல்ல!
– சின்னத்துரை இராசகருணா,
யேர்மனி.

206. வீட்டிற்கோர்
மரம் வளர்க்கின்றோம்
ஆன்டெனாக்கள்!
– சூர்யா,
ஆ.கொக்குளம், மதுரை.

207. உள்ளே எச்சில் இலைகள்
வெளியே திருவோடுகள்
அன்னதானம் யாருக்கு!
– ஆங்கரை பைரவி,
இலால்குடி, திருச்சி.

208. சலனமற்ற குளத்தில் பிம்பங்கள்
அய்யனார் தலைக்கு மேலே
ரம்ஜான் பிறை!
– மா. கண்ணன்,
இராஜபாளையம், விருதுநகர்.

209. மூச்சுக் காற்றை
விற்று வாழுகிறான்
பலூன் வியாபாரி!
– சீ. மு. பார்த்தீபா சங்கர்,
மாலை மலர் நாளிதழ், ஈரோடு-1.

210. போரின் சாம்பலின்றும்
உயிர்த்தெழும் விடுதலை வேட்கை
ஃபீனிக்ஸ் பறவையாய்!
– மஞ்சு ரெங்நாதன்,
இராஜபாளையம், விருதுநகர்.

211. காமம் வளர
அறுவடையாகிப் போன பயிர்
விலைமகள்!
– பாவலர் தமிழவன்,
கிருஷ்ணகிரி.

212. இறைவன் எங்கும் இருக்கிறான்
இல்லையா?
இடிக்கப்பட்ட மசூதியில்!
– எஸ். முகம்மது ஷா,
அரசு பொறியியற் கல்லூரி, காரைக்குடி-4.

213. விண் முட்டும் மாளிகை
அஸ்திவாரத்தினுள்
மனசு!
– கவிஞர். சிவதாசன்,
திருப்பூர், கோவை.

214. நகரத்து வாசனை
கிராமத்தில் வீசுகிறது
ஆலைப்புகை!
– மு. முஸ்தபா,
இராமேஸ்வரம்.

215. வயிற்றை இறுக்கும் நூல்
வதைபடும் வண்ணத்துப்பூச்சி
சிரிக்கின்றான் சிறுவன்!
– இரா. சரவணன்,
புனல்வாசல், தஞ்சை.

216. குடமுழுக்கு நடக்கின்ற
கோயிலுக்கு அருகில்
கூரையில்லா பாடசாலை!
– கா.ந. கல்யாணசுந்தரம்,
செய்யாறு, திருவண்ணாமலை.

217. வாசத்தை திருட
தென்றலுக்கு சம்மதிக்கிறதோ
அசைந்தாடும் மலர்!
– மு. அருணகிரி,
அவனியாபுரம், மதுரை-12.

218. பிரியாணியும் பிராந்தியும்
வாக்குப் பெட்டிக்குள்
குடிமகன்!
– வீ. சக்தி மனோகர்,
சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை-5.

219. ஈர்ப்பு சக்தி கூடும்
தூரம் அதிகமாக, அதிகமாக
காதலின் விதி!
– ஆனா,
அபிசேகபுரம், புதுச்சேரி-7.

220. மென்மையைப் போற்றியவன்
வன்மையாளனாய்
காதல் – கலப்பு மணம்!
– சி. அமுதவல்லி,
தாவணி, நீலகிரி.



படிப்பகம்

www.padippakam.com

221\. மௌனங்களின் பேச்சில்
உறவின் உயிர்ப்புகள்
காதல் !
– என்.ஜே. கந்தமாறன்,
லால்பார்க் தோட்டம், கர்நாடகா.

222\. அனாதை இல்லத்தில்
அடைக்கலம் ஆனது காகம்
நகர நேயம் !
– த.ப. மூர்த்தி,
தெப்பக்குளம், திருச்சி – 2.

223\. நாடு முழுவதும் பந்த்
ஓடுவது நிற்கவில்லை
நதி !
– ஆர்.எம். பாண்டியன்,
அறந்தாங்கி, புதுக்கோட்டை.

224\. பத்துமாதம் சுமந்தவள்
இன்னும் சுமக்கிறாள்
வேலையில்லாத நான் !
– வ. முகம்மது ரஜபுதீன்,
உச்சிப்புளி, இராமநாதபுரம்.

225\. மலர்கள்
சிரிக்கின்றன
சருகாவலதை மறந்து ....
– வீ. வளர்மதி,
உடுமலைப்பேட்டை, கோவை.

226\. நீந்தச் சென்றவர்கள்
மூழ்கி விட்டார்கள்
மதுப்பழக்கம் !
– விஜயலெட்சுமி மாசிலாமணி,
ரியாத், சவுதி அரேபியா.

227\. சாதிமதம் சாகடிக்க
சரியான ஆயுதம்தான்
காதலும் நட்பும் !
– கோ. பாரதிமோகன்,
தாராசுரம், தஞ்சை.

228\. எம்மதமும் சம்மதம்
கருவறை
திறக்கும் வரை !
– துல. சேகர்,
சோளங்காபாளையம், ஈரோடு.

229\. உரிமை வேலி
அடிமைக் கூலி
தாலி !
– முனைவர் தமிழப்பன்,
தி.நகர், சென்னை–17.

230\. செலவில்லாத கல்யாணம்
தந்தைக்கோ மகிழ்ச்சி
டைரக்டர் கட் என்றார் !
– இரா. கலாராணி,
சிவகாசி, விருதுநகர்.

231\. சாதி அடிப்படையில்
இட ஒதுக்கீடு
சமத்துவபுரம் !
– வெ. தசரத பாண்டியன்,
உத்தப்பநாயக்கனூர், மதுரை.

232\. வாழும் சக மனிதனை
புறக்கணிப்பவரின் போலிப்புலம்பல்
இரங்கற் பா !
– ஏகலைவன்,
சேலம் -15.

233\. கட்சிக்கு கட்சி தாவி
தனிக்கட்சி தொடங்கிவிட்டது
தன்னலக் குரங்கு !
– புலவர். ஆ.வே. இராமசாமி,
வைரிச்செட்டிப்பாளையம், திருச்சி.

234\. பழம் தந்த மரத்தை
எச்சத்தால் பரப்பும்
நன்றியுடன் பறவை !
– வே. ம. தமிழரசு,
பரமத்திவேலூர், நாமக்கல்.

235\. அனாதை பிணத்தின்
சுருக்குப் பையில்
சேமிப்பில் மகனுக்கான உயில் !
– ஆர். சித்ரா,
பச்சைப் பெருமாநல்லூர், நாகை.

236\. தண்ணீரின்றி
தாகம் தீர்த்தது
ஆலமர நிழல் !
– மரு.இராம. வேதநாயகம்,
வண்டாந்தாங்கல், வேலூர்.

237\. தருமபுரி எப்போது
ரோமாபுரி ஆனது?
பேருந்தில் வெண்கள் எரிப்பு !
– எம். செல்வராஜ்,
திருபுவனம், தஞ்சை.

238\. சாதி பார்த்து நின்ற மனிதனால்
நீதிக்கு நேர்ந்தது
நெறிகட்டிய அவலம் !
– கோ. முருகவேல்,
திருக்குற்றாலம், நெல்லை.

239\. காவிரி வெள்ளம்
காணும் போதெல்லாம்
அக்கரை தொட்ட நினைவுகள் !
– இளவல் ஹரிஹரன்,
மயிலாப்பூர், சென்னை-4.

240\. மழலை பசியாற
புட்டிப்பால்
தாய்மை !
– க. காயத்ரீ,
அரும்பார்த்தபுரம், புதுச்சேரி.



படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| **241.** மனிதன் இறந்தபின்னும்<br>வாழவேண்டும்<br>ஆவியாக அல்ல !<br>திரைக் கவிஞர்<br>**– சேலம் ஆறுமுகன்,** | **246.** கனமின்றி துடிக்கும்<br>கொடியில் காயும் புடவை<br>இறந்த குழந்தை !<br>**– வித்தியாசன்,**<br>திருப்பூண்டி, நாகை. |
| **242.** சாதி ஒழிப்பு<br>பிரச்சாரக் கூட்டம்<br>சேரிக்கு வெளியே!<br>**– கவியருவி மு. அருணாசலம்,**<br>வத்தலக்குண்டு, திண்டுக்கல். | **247.** தீப்பெட்டி தொழிற்சாலை<br>வெளிச்சத்திற்கு வராத விடியலாய்<br>நாளைய மன்னர்கள் !<br>**– கு. கருணாநிதி,**<br>சோழன் மாளிகை, தஞ்சை. |
| **243.** அன்பே நீ<br>ஹலோ சொன்னால்<br>போனில் கூட ஒளிவட்டம் !<br>**– இரா. சண்முகசுந்தரம்,**<br>தேரம்பாளையம், கோவை. | **248.** அவள் உறங்கச் சென்றாள்<br>தூங்கிப் போன என் மனதை<br>தட்டி எழுப்பிவிட்டு !<br>**– கே.ஆர். சந்தோசம்,**<br>சிதம்பரம், கடலூர். |
| **244.** பசி வெறியில் கொசுவும்<br>கொலை வெறியில் நானும்<br>இராப் போராட்டம் !<br>**– ஸ்ரீ சூர்யா,**<br>பொத்தனூர், நாமக்கல். | **249.** மனித நேயம்<br>புதை குழியில்<br>கண்ணி வெடி !<br>**– செ.க. செகதீசன்,**<br>தண்டனை சிறையாளர், வேலூர் - 2. |
| **245.** தள்ளுபடி செய்தார்<br>தள்ளுபடி செய்ததால்<br>சொத்துக்குவிப்பு வழக்கு !<br>**– கு.அ. தமிழ்மொழி,**<br>மீனாட்சிப்பேட்டை, புதுச்சேரி-9. | **250.** பேரறிஞர் பிறந்த மண்<br>தழைத்தது ஆரியம்<br>காஞ்சியில் காமக்கோடி !<br>**– ஏழைதாசன் விஜயகுமார்,**<br>அடப்பன்வயல், புதுக்கோட்டை - 2. |

**கவிதை வரிசை எண் 1, 126, 249 ஆகியவை சிறைத்துறை அலுவலர்களால் தணிக்கை செய்யப்பட்டு, வெளியிட அனுமதிக்கப்பட்டவை.**

## இந்தியப் பேனா நண்பர் பேரவை, மும்பை.
## Indian Penpals Langue, Mumbai.

# 10 - வது நட்புச் சங்கமம்

கோபிச் செட்டிபாளையம் மே. 21–

ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையத்தில் உள்ள மொடச்சூர் சாலை பி.ஆர். திருமண மண்டபத்தில் மும்பை இந்தியப் பேனா நண்பர் பேரவையின் 10 – வது நட்புச்சங்கமம் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

அன்பு, நட்பு, மனிதநேயம், மதநல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றை வலியுறுத்தும் அமைதிப் பேரணியில் உறுப்பினர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர் இல்லங்களுக்கு நல உதவிகள் மனநலம் குன்றியோர் இல்லங்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் சிறப்புற நடத்தப்பட்டது. சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

இப்பேரவையின் சென்னை அமைப்பாளர் 'குன்றத்தூர் முரசு' ஆசிரியர் **ஜெ. பொன்னரசு**, ஈரோடு மாவட்ட அமைப்பாளர் **கே. கருப்புசாமி** மற்றும் கிளை உறுப்பினர்கள் இவ்விழா ஏற்பாடுகளை வெகு சிறப்பாக செய்திருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



# 'தலிப்பா' அன்பர் ! 'துளிப்பா' நண்பர் !

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் 15-08-1944 இல் பிறந்தார் கோ. சீனிவாசன். பெற்றோர் வீ. இரா. கோவிந்தராஜுலு – சாவித்திரி அம்மாள். புதுமுக வகுப்பு - முதல் பிரிவு ( கணிதம், இயற்பியல், வேதியல்) பயின்றார். உயர்நிலைப் பள்ளி மேல் வகுப்புகளில் ( 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் சிறப்புப் பாடமாக பொறியியல் படித்தார்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கணக்கு மேற்பார்வையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். இப்பணிக்கு வருமுன் வேலூர் சி.எம். சி . மருத்துவமனையில் புள்ளியியல் எழுத்தராக இரண்டாண்டு காலம் பணியாற்றினார். இவர் மனைவி சசிகலா இல்லத்தரசி ஆவார். மகன் வேதநாராயணன் எம்.சி.ஏ. படித்துள்ளார். மகள் ரேவதி பி.எஸ்.சி. கணினிவியல் பயின்றவர்.



இவர் ஒரு மரபுக் கவிஞர். சிறுவயது முதலே கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்ட இவரைக் கவிதை எழுதத் தூண்டியது கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல் வரிகள்தான். இவர், தமிழை சிறப்புப் பாடமாகப் பயிலா விட்டாலும், பிற்காலத்தில் உடன் பழகிய கவிஞர்கள் மூலம் யாப்பிலக்கணம் பயின்று, மரபுக்கவிதைகளை எழுதி வருகிறார். புதுக்கவிதை மற்றும் துளிக்கவிதை (அய்க்கூ) எழுதுவதிலும் திறமை பெற்றவர்.

பல தமிழ் அமைப்புகளின் மேடைகளில் கவிதைகள் வாசித்துள்ளார். கவியரங்கங்களையும், இலக்கிய நிகழ்ச்சிகளையும் தலைமை ஏற்று நடத்தி வருகிறார். பட்டிமன்றங்களிலும் பேசி வருகிறார். சென்னை வானொலியில் மெல்லிசைப் பாடல்களாகவும், ஜெயா தொலைக்காட்சியில் கவிச்சோலை நிகழ்ச்சியிலும் இவரது கவிதைகள் ஒலிபரப்பாகின்றன.

'சிந்தனைக் கோட்டை' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். 101 மரபுக் கவிதைகளைக் கொண்ட இந்த நூல், தமிழ்நாடு அரசு பொது நூலக இயக்கத்தால் தெரிவு செய்யப்பட்டு, கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நூலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இவருக்குக் கலை ஆர்வமும் உண்டு. நாடகங்களில் நடித்த அனுபவமும் உண்டு. தானே 'அண்ணா கலை மன்றம்' ஏற்படுத்தி, தலைவராகி சேவை செய்தார். திரைப்பட நட்சத்திரங்களைக் கொண்டு, நாடகங்களை நடத்தி பெரும் வரவேற்பைப் பெற்றார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின், செய்யாறு கிளையின் பொருளாளராகவும் துணைத்தலைவராகவும் இரண்டு ஆண்டுகள் சேவையாற்றினார்.

செய்யாறு டாக்டர் சிவாஜி நகர்



படிப்பகம்

www.padippakam.com

குடியிருப்போர் நலச் சங்கம் - ஆரணி கூட்டுச்சாலை அருள்மிகு பால விநாயகர் ஆலயம் - ஆர்.சி.எம். நடுநிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் - தேமதுர தமிழ் மன்றம் ஆகியவற்றில் பல்லாண்டுகளாகப் பதவி வகித்து பொதுநலச் சேவை புரிந்து வருகிறார்.

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்து தமிழ் வளர்ச்சித் துறைக்கு அனுப்பி உள்ளார். அதன்படி தமிழில் ஓர் உயிரெழுத்தும் 14 மெய் எழுத்துக்களும், ஆக அடிப்படை எழுத்துக்களாக 15 எழுத்துக்கள் மட்டுமே கொண்டு, மீதி எழுத்துக்களை சீரான குறிகளைச் சேர்த்து தொடர் எழுத்துக்களாக வரும் வகையில் வடிவமைத்து உள்ளார். இம்முறை கணினியில் கையாள மிகவும் எளிமையாக இருக்கும் என்று இவர் கூறுகிறார்.

தற்போது ஆன்மீகம் என்ற பெயரில் மூடநம்பிக்கையில் உழன்று கொண்டிருக்கும் பாமர மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் "அர்த்தமுள்ள ஆன்மீகம்" என்ற தலைப்பில் ஒரு நூலும் எழுதிக் கொண்டிருக்கிறார்.

செய்யாறு தேமதுரத் தமிழ் மன்றம், இவரது தமிழ்ப்பற்றினையும் கவிதை ஆற்றலையும் கருத்து வளத்தினையும் பாராட்டி "சிந்தனைக் கவிஞர்" என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. ஏழைதாசன் திங்கள் இதழுக்கு புரவலர் கட்டணம் ரூ. 1000 வழங்கி பெருமைபடுத்தி உள்ளார். அன்னாரது பணிகள் வெற்றி பெற நாமும் வாழ்த்துகிறோம்.

சிந்தனைக் கவிஞர் பட்டுக்கோட்டை சீனிவாசன், 683, கீழ் புதுப்பாக்கம் சாலை, செய்யயாறு, திருவத்திபுரம் -604407, திருவண்ணாமலை மாவட்டம். தொலைபேசி எண்: 04182-224190.

- ஏழைதாசன், புதுக்கோட்டை-2.

**ஏழைதாசன் உங்கள் இல்லம் தேடிவர ஆண்டுக் கட்டணம் ரூ. 60 /- பணவிடை அனுப்பலாமே!**


ஏழைதாசன்

மலர் - 13 இதழ் -9
திருவள்ளுவர் ஆண்டு - 2036
சித்திரை

'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்' - கண்ணதாசன்

ஏழைதாசன் முதல் புரவலர்
உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை-அமெரிக்கா


**கட்டண விபரம்**

உள்நாடு (அஞ்சல் வழி)

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | ரூ. 60/- |
| வாழ்நாள் கட்டணம் : | ரூ. 600/- |
| புரவலர் நன்கொடை : | ரூ. 1000/- |

வெளிநாடு (வான்வழி)

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | US $ 10/- |
| வாழ்நாள் கட்டணம் : | US $ 100/- |
| புரவலர் நன்கொடை : | US $ 200/- |

வெளிநாடு விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழுப்பக்கம் : | ரூ. 1000/- |
| அரைப்பக்கம் : | ரூ. 500/- |

உள்நாடு விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழுப்பக்கம் : | ரூ. 1000/- |
| அரைப்பக்கம் : | ரூ. 500/- |

**பெயர் :** EALAIDHASON,
**வங்கி இலக்கம் :** A/c No. 90259,
**முகவரி :** INDIAN BANK, PUDUKKOTTAI - 622 001, TAMILNADU, INDIA.

எல்லாவிதமான தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
ஏழைதாசன்
26, அப்பன் வயல் 8 ஆம் வீதி,
புதுக்கோட்டை- 622 002.
தொலைபேசி இலக்கம்
**0091 - 04322 - 226 426.**

**கட்டணம் அனுப்பும் வழிமுறைகள்**

பணவிடை, காசோலை, வரைவோலை, கேட்போலை, பிரிட்டன், கனடா அஞ்சல் ஆணைகள், வங்கிமூலம் வங்கிக்கு, உண்டியல், தனி நபர் மூலம், வெஸ்டர்ன் யூனியன் என எத்தனையோ வழிகளில் ஏழைதாசனுக்கு கட்டணங்கள், நன்கொடைகள் அனுப்பலாம். மனமிருந்தால் மார்க்கம் உண்டு.

☆ 'அய்க்கூ' சிறப்பிதழ் ☆



படிப்பகம்

www.padippakam.com

# கொடிகட்டி பறக்கும் அய்க்கூ

பதினாறாம் நூற்றாண்டில் ஜப்பான் நாட்டுக் கவிஞர் பாஷோ எழுதியவை, 'ஜென்' பாடு பொருளை உள்ளடக்கி இருந்தது. அடுத்து வந்த பூசன், இஸ்ஸா, ஷிகி ஆகியோர் எழுதியவைகளில் சற்றே மாறுதல்கள் உண்டாயின.

தமிழில் மகாகவி பாரதியார் ஜென் கவிதைகள்சிலவற்றை அறிமுகப்படுத்தினார். இன்று தமிழ்நாட்டில் தங்குதடையின்றி கொடிகட்டி பறக்கிறது அய்க்கூ. தமிழ்ப் படைப்பாளர்களில் பலரும் இக்கவிதை முயற்சியைப் பாராட்டுகிறார்கள்.



முதல் வரியில் ஒரு காட்சிப் பதிவு - இரண்டாவது வரியில் அதன் விரிவு - மூன்றாவது வரியில் ஒரு அதிர்வு - இதுதான் எளிமையான அய்க்கூ இலக்கணம். படைப்பாளி தான் சொல்ல வந்த கருத்தை ஒரு பாதிதான் சொல்ல வேண்டும். மறு பாதியை வாசகனுக்கு விட்டு விட வேண்டும்.

உலகம் முழுவதும் இந்தச் சின்ன வடிவத்தை கையாளாதவர்களே இல்லை என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அய்க்கூ, அய்புன், லிமரைக்கூ, சென்ரியு என இதன் வடிவங்கள் மேலும் வளர்கின்றன.

தமிழ் கூறும் நல்லுலகம் நமது முந்தைய தொகுப்புகளான அய்க்கூ - 50, அய்க்கூ-100, அய்க்கூ-200 ஆகியவற்றை வரவேற்று ஆதரவளித்த நம்பிக்கையில் இதோ அய்க்கூ - 250 உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

ஒரு கவிஞர், தனது சொந்த படைப்புகளை வெளியிடுவதற்கும், பல கவிஞர்கள் ஒன்று கூடி ஒரு தொகுப்பு வெளியிடுவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. முன்னதில் ஒருவரே பலபாடு பொருள்களை புனைவதில் பல முரண்பாடுகள் ஏற்படுகின்றன. பின்னதில் அப்பெருங்குறை அறவே இல்லை. இருந்தாலும் அக்கவிதை வேறொருவர் உடையதாகிறது.

இத்தொகுப்பில் பங்கேற்றவர்களில் அடிமட்ட வேலை செய்பவர்கள் முதல் உயர்மட்ட அதிகாரிகள் வரை உண்டு. கணவன்-மனைவி, தந்தை - மகன், அண்ணன் - தம்பி பாச உறவுகளும் உண்டு. சிறைக்கோட்டை முதல் செயின் ஜார்ஜ் கோட்டை வரையிலானவர்களும் உண்டு. வரிசை எண்கள் - கவிதைகளை முன்வைத்து தரம் பிரித்தவை அல்ல. எண்ணிக்கையாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

'அய்க்கூ' சிறப்பிதழுக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட அனைத்து பேர்களின் கவிதைகளும் இங்கு பதிவு செய்யப்பட்டு உள்ளன. புலம் பெயர்ந்த மண்ணில் இருந்தாலும் எமது முயற்சிக்கு வாழ்த்துச் சொன்ன கவிஞர்கள் வேலணையூர் பொன்னண்ணா, விக்னா பாக்கியநாதன், தமிழ் ஈழ முருகதாசன், பாரீசு பார்த்தசாரதி, குவைத் இரா. மோகன், பிரான்சு கி. பாரதிதாசன், சிங்கை தமிழ்ச் செல்வம் ஆகியோருக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

இந்தக் கவிதைகள் குறித்தும், தொகுப்புபணி பற்றியும் உங்கள் கருத்துக்கள் எம்மை வந்தடையட்டும். அது அடுத்து வெளிவர உள்ள தனிப் புத்தகமான அய்க்கூ - 500 கவிதைத் தொகுப்புப் பணியை செம்மைப்படுத்தும்.

பங்கு பற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்களும் நன்றிகளும்.

என்றென்றும் அன்புடன்,
**எஸ். விஜயகுமார்,**
ஆசிரியர், 'ஏழைதாசன்'.

புதிதாக இதழ் பெறுபவர்கள்
தொடர்ந்து பெற
உறுப்பினர் கட்டணம் அனுப்புங்களேன் !



படிப்பகம்

www.padippakam.com



# தீராத நோய்கள் எல்லாம் தீர்க்கும் இவன் ஒரு சித்தன் இவன் தொட்டிடில் பிணிகள் போம் (அருள்வாக்கு)

சித்த மருத்துவ மேதை
அரிமா டாக்டர்

## A. தேவராஜன், R.M.P. (IND) C.B.I.M. அவர்கள்

கீழ்கண்ட நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கிறார்

**எய்ட்ஸ், மூலம், பவுத்திரம், ஆணிக்கால், சிறுநீரக கல்லடைப்பு (அறுவை சிகிச்சை இன்றி) முகவாத சன்னி, வயிற்றுவலி, வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, மலட்டுத்தன்மை, குழந்தைகள் உண்டாகுமா? உண்டாகாதா? என்பதை சிறிய பரிசோதனையின் மூலம் துல்லியமாக கூறப்படும், சிகிச்சையும் அளிக்கப்படும்.**

ஆண்மைகுறைவு, சொப்பன ஸ்கலிதம், சருமவியாதிகள், இருமல், இளைப்பு மற்றும் பல நோய்களுக்கு சிகிச்சை உண்டு,

மருத்துவத் துறையில் 50 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். 79 வயது நிரம்பியவர். சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர். எய்ட்ஸ் சிகிச்சைக்காக சிறப்பு பயிற்சி பெற்றவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ்' நோய் பிரிவிற்கு மதுரை மாவட்டத்திற்கு தலைவராக இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான் முதலிய நாடுகளுக்கு சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர். லண்டன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து நாடுகளில் இருந்து வந்த எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து புகழ்பெற்றவர். அமைச்சர்களாலும், பத்திரிக்கையாளர்களாலும் பாராட்டு பெற்றவர்.

சித்த மருத்துவ மேதை அரிமா டாக்டர் **A.தேவராஜன்**, R.M.P.(IND)C.B.I.M.

**மனோன்மணி மருத்துவமனை**

7-3/125 பெருமாள்கோவில் தெரு, பேரையூர் (TK)
மதுரை (DT) - 625 703. ☎ : (04549) 275695

**Cell : 94437-75695**

பிரதிமாதம் 10,25 தேதிகளில் மதுரையில் கீழ்கண்ட முகவரியில் டாக்டரை சந்தித்து சிகிச்சை பெறலாம். நேரம் காலை 11 மணி முதல் மாலை 7 மணி வரை. மற்ற நாட்களில் எனது புதல்வர் டாக்டர் D.C. செங்குட்டுவன் அவர்களிடம் ஆலோசனை பெற்று மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம். பேரையூர் வர விரும்பினாலும் வரலாம்.
தபால் மூலம் ஆலோசனை பெற ரூ. 25/- அனுப்பவும்.

டாக்டர் **D.C. செங்குட்டுவன்** B.Sc.D.H.M.S.,
டாக்டர் **ப்ரீதா செங்குட்டுவன்** D.H.M.S.,
போன் : (0452) 521354 (கிளினிக்)
650692 (வீடு)

## ஹோமியோ ஹோம்

**ப்ரீதா கம்ப்யூட்டரைஸ்டு ஹோமியோ கிளினிக்**

*S -7, கிங்ஸ் கோர்ட், அன்னபூரணா ஹோட்டல் அருகில்,*
*அண்ணா பஸ் நிலையம், மதுரை - 625 020.*

பஸ்ஸில் இறங்க வேண்டிய இடம்
அண்ணா பஸ் நிலையம், மதுரை
வேலை நேரம்
காலை 9.30 முதல் 11 மணி வரை
மாலை 7.30 முதல் 9 மணி வரை
சனி காலை 9.30 முதல் 11 மணி வரை
சனி பிற்பகல், ஞாயிறு விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI Regd. No. 55308/92
R.C. No. 22449/98 ❋ 'Registered' No. PMG/CR/01/03-05/PDK

# அய்க்கூ குறித்து....

★ அய்க்கூ .... பாதியாய் திறந்த கதவு. நம்மை அழைக்கும் கைச்சைகை. தூய்மையாய்த் துடைக்கப்பட்ட ஒரு கண்ணாடி - **ஆர்.எச்.பிளித்**

★ அய்க்கூ என்பது தூய்மையான கவிதையின் அடர்த்தியான சாறு பிழிவு. - **கென்னத் யசூதா**

★ கவிஞன் இறங்கிக் கொள்ள வாசகன் அதன் மீது பயணம் தொடர்வான்- அதுதான் அய்க்கூ. - **ரேமாண்ட் ரோசலிப்**

★ சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம்.... அய்க்கூ. - **அப்துல் ரகுமான்**

★ பூக்கள் சிறியனவாயிருந்தால் என்ன...? மலர்களின் அளவைப் பொறுத்தல்ல மணம். இந்தச் சிறுகவிதைகளும் அப்படித்தான். - **நிர்மலா சுரேசு**

★ கீழ் திசைப் பௌத்த சிந்தனையில் முகிழ்த்து. சீனத்துப் பண்பாட்டில் திளைத்து, சப்பானிய பார்வையில் மலர்ந்து மணம் வீசுவது அய்க்கூ - **தி. லீலாவதி**

★ அய்க்கூ கவிதையின் உணர்ச்சி, இனிமை, இருவர் உடலில் மாறி மாறிப் பாயும் காதல் போலாகும்.- **மேஜர். கதிர் மகாதேவன்**

★ கவிதை உலகத்தின் புதிய மழலை அய்க்கூ. இலக்கிய வடிவங்களில் ஓர் அணு. ஒரு மேதையின் குறுஞ்சிரிப்பு.- **மேலாண்மை பொன்னுச்சாமி**

★ அய்க்கூவின் சிறப்பு அதைப் படிப்பவனை அவனையறியாமலேயே கொள்ளையடித்து விடுவது. கட்டளைச் சொற்கள் கவிதைகளாக முகம் காட்டுகிற காலத்தில், கவிதையே கட்டளைச் சொல்லாக திமிறி எரிவது அய்க்கூ ஒன்றில்தான். - **வலம்புரிஜான்**

★ தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதைக்குப் பிறகு தன் இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முயன்று வருவது, அதனோடு இரத்த சம்பந்தம் கொண்ட அய்க்கூ. - **ஈரோடு தமிழன்பன்**

★ வார்த்தைகளே கவிதை, போதனை செய்வதே கவிதை, புலம்புவதே கவிதை,புரியாமல் புதிராக எழுதுவதே கவிதை என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் தமிழ்க் கவிதையில் அய்க்கூ ஒரு ஒழுங்கைக் கொண்டுவரக் கூடும். - **மாலன்**

★ முதலடியில் சொல்ல வந்த விசயத்தை எடுப்பாக்கி, இரண்டாவது அடியில் தொடுப்பாக்கி, மூன்றாவது அடியில் மின்தாக்கு முடிப்பு அமைய வேண்டுவது அய்க்கூ யாப்பு. - **நெல்லை சு. முத்து**

★ மூன்றடிக்குள் ஒரு முத்தான செய்தி; சிந்தனை; கருத்து; கற்பனை; காட்சி; 'படார்' என்றோர் அடி....! இப்படியிப்படித் தமது உள்ளடக்க உயர்வால் நிமிர்ந்து நிற்கின்றன அய்க்கூ கவிதைகள். -**அமுதபாரதி**

**பெறுநர் திரு.**

Published, Printed and Owned by S. Vijayakumar.
Printed at Ealaidhason Printers, Pudukkottai - 2.
Published from 26, Adappanvayal 8 th Street, Pudukkottai - 2, Tamil Nadu, INDIA.
Editor : S. VIJAYAKUMAR B.A., Telephone No: 0091 - 04322 - 226 426.

படிப்பகம்